**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC. 211/2021**
**Prosecution Witnesses: 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : கார்த்திஸ்வரி | Caste | : |
| Father Name/ Husband Name | : சோனையன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(15.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் சிவரக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் மில்லில் பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் தர்மசுந்தரம், நாகமுத்துராஜா, அழகுலட்சுமி, பாக்கியலட்சுமி ஆவார்கள். மற்றொரு எதிரி செண்பகலட்சுமி இறந்துவிட்டார். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். கடந்த 13.03.2021 அன்று மாலை 4.00 மணியளவில் எங்கள் ஊரில் உள்ள இருளாயி அம்மன் கோவில் அருகே உள்ள எங்களுக்கு சொந்தமான பூர்வீக வீட்டை எதிரிகள் அனைவரும் சேர்ந்து இடித்தார்கள். இரண்டு பேருக்கும் பாத்தியப்பட்ட சொத்தை நீங்கள் எப்படி இடிக்கலாம் என நானும் எனது பெரியப்பா மகன் சந்தனகுமார் என்ற மணிகண்டன் கேட்ட போது ஆஜர் எதிரிகள் எனது அண்ணன் சந்தனகுமாரை உள்ளாடையுடன் நிற்க வைத்தார்கள். எனது அப்பா தங்கராஜை எதிரி அழகுலட்சுமி விலக்குமாற்றால் எனது அப்பாவை அடித்தார். (சாட்சி அழுதுகொண்டே சாட்சியம் அளிக்கிறார்). என்னை எதிரி தர்மசுந்தரமும் நாகமுத்துராஜாவும் கையால் என்னை கன்னத்தில் அடித்து எனது சட்டையை கிழித்து சேலையை உருவி

பெண் என்றும் பாராமல் வன்கொடுமை செய்தார்கள். எதிரிகள் அடித்ததில் எனக்கு கன்னத்தில் காயமும் தர்மராஜா என்னை வலதுகையில் கடித்ததில் வலது கையில் காயமும் ஏற்பட்டது. அந்த காயதழும்பை சாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கிறார். என்னை எனது அக்கா கோடிஸ்வரி சிகிச்சைக்காக திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். முதல் உதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு நான் 1வாரம் சிகிச்சையில் இருந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1,2,3,5எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

1வது எதிரி எனக்கு மாமன் முறையாவார். 2வது எதிரி எனக்கு தம்பி முறையாவார். 3வது எதிரி எனக்கு சித்திமுறையாவார். 5வது எதிரி எனக்கு சித்திமுறையாவார். இந்த பிரச்சினைக்கு முன்பு நாங்கள் பேசிக்கொள்வோமா என்றால் பேசிக் கொள்ளமாட்டோம். இந்த பிரச்சினைக்குரிய பூர்வீக வீட்டில் சம்பவ சமயத்தில் யார் குடியிருந்து வந்தார்கள் என்றால் இறந்துபோன 4வது எதிரி குடியிருந்து வந்தார். 1வது மற்றும் 3,5 எதிரிகளுக்கு 4வது எதிரியின் தாயார் என்றால் சரிதான். 2வது எதிரிக்கு 4 வது எதிரி பாட்டி என்றால் சரிதான். அந்த வீட்டில் இறந்துபோன 4 வது சுமார் 30 வருடமாக குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். இறந்துபோன 4வது எதிரி மீது கடந்த 30 வருடங்களுக்கு முன்பு அவரது அப்பா எழுதிக்கொடுத்து அவருக்கு பட்டா ஏற்பட்டு அனுபவித்து வந்து வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை நான் அப்பா வழி சொத்து என்பதால் திருப்பி நான் கேட்டேன் என்றால் இல்லை. இதனால் எங்களுக்குள் பேச்சு வார்த்தை கிடையாது. நான் பூர்வீக வீடு சம்பந்தமாக நான் எதுவும் சிவில் வழக்கு தொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த வீடு பாலடைந்த நிலையில் இருந்ததால் இறந்துபோன 4வது எதிரியின் வேண்டுகோளின் படி தான் மேற்படி வீட்டை எதிரிகள் சேர்ந்து இடிக்க போனார்கள் என்று சொன்னால் சரியல்ல. அது பழைய வீடு அல்ல புது வீடு தான். ஆனால் இடித்தார்கள். எனது வீடும் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடமும் எவ்வளவு தூரம்

இருக்கும் என்றால் சுமார் 10 வீடு தாண்டி இருக்கும் என்றால் சரிதான். எதிரிகள் இடிக்கும் போது நான் அங்கு இருந்தேனா என்றால் இல்லை. நான் மறுநாள் எதிரிகளிடம் சென்று ஏன் இடித்தீர்கள் என்று கேட்டேன். எதிரிகள் அவர்களது பழைய வீட்டை தான் இடித்தார்கள் என்று சொன்னாலும் நாங்கள் தான் தேவையில்லாமல் பிரச்சினை செய்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் பிரச்சினை செய்தது சம்பந்தமாக இறந்துபோன 4வது எதிரி கொடுத்த புகாரின் பேரில் என் மீதும் மற்ற 4 நபர்கள் மீதும் குற்ற வழக்கு எண்.72/2021 என்ற நம்பரின் கீழ் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் எனது அக்கா மூலம் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகாரில் இடைச்செருகலாக சில வார்த்தைகள் சேர்க்கபட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதேபோல் பின்புறமும் அழிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் தான் சம்பவயிடத்தில் எதிரிகளிடம் சென்று சண்டை போட்டோம் என்று சொன்னால் சரியல்ல. அப்படி சண்டை எதுவும் நடக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எதிரிகள் என்னை கட்டையால் அடிக்கவும் இல்லை. அவ்வாறு அடித்தால் எனக்கு கொடுங்காயம் ஏற்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. எதிரி அழகுலட்சுமி என்னை விலக்கமாற்றால் அடித்தார் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் என்னையும் மற்றவர்களையும் எந்தவிதத்திலும் அடிக்கவும் இல்லை சண்டைபோடவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி தர்மசுந்தரம் என்னை வன்கொடுமை எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தர்மசுந்தரம் வேலையில் இருப்பதாலும் இந்த வீட்டில் பங்கு வேண்டும் என்பதால் நடக்காத நிகழ்வுக்காக வழக்குக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு எப்போது சென்றேன் என்றால் ஆம்புலன்சில் 5 – 5.45 மணிக்கு சென்றேன். நான் மருத்துவமனைக்கு இரவு 11 மணிக்கு தான் சென்றேன் என்றால் சரியல்ல. அங்கு இருந்து நான் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சென்றேன். காதில் வலி இருந்ததால் மட்டும் சென்றேன். அங்கு 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். அதன் பிறகு நாங்கள் சொத்து சம்பந்தமாக பேசினோமா என்றால் இல்லை.

நாங்கள் பேசி பாகம் கொடுக்கவில்லை என்பதால் தான் பின்னிட்டு நான் எதிரிகள் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அப்படியொரு சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 211/2021**
**Prosecution Witnesses: 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஞானசுந்தரி** | Caste | : |
| Father Name/ Husband Name | : **வேலுச்சாமி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(15.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் சிவரக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் மில்லில் பணி செய்து வருகிறேன். அ.சா.1 கார்த்திஸ்வரி எனது அண்ணன் மகள் ஆவார். ஆஜர் எதிரி தர்மசுந்தரம், அழகுலட்சுமி, பாக்கியலட்சுமி, நாகமுத்துராஜா ஆகியோர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். மற்றொரு செண்பகவள்ளியும் எனது உறவினர் தான் ஆவார்.அவர் இறந்துவிட்டார். அ.சா.1க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் சொத்தது சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 13.01.2021 அன்று மாலை 3.30 மணியளவில் சிவரக்கோட்டை இருளாயி அம்மன்கோவில் முன்பு வைத்து கார்த்திஸ்வரி அவரது தந்தை தங்கராஜ் தாயர் செல்வி, அவரதுஅக்கா கோடிஸ்வரி மற்றும் அவரது பெரியப்பா மகன் சந்தனகுமார்

என்ற மணிகண்டன், மற்றும் அ.சா.1 ன் தம்பி சந்தனகுமார் ஆகியோர்கள் இறந்துபோன செண்பகவள்ளியிடம் பங்கு பிரிக்காத சொத்தை ஏன் இடித்தீர்கள் என கேட்டதற்கு எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து அ.சா.1 மற்றும் அவரது தரப்பை சேர்ந்தவர்களை அசிங்கமாக பேசினார்கள் என்றும் எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கார்த்திஸ்வரி, சந்தனகுமார் என்ற மணிகண்டன் மற்றும் கோடிஸ்வரி ஆகியோர்களை எதிரிகள் கலக கூட்டமாக கையில் ஆயுதங்களுடன் ஒன்று சேர்ந்து அசிங்கமாக பேசி அடித்துக் காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்து அ.சா.1 ஐ பெண் என்றும் பாராமல் வன் கொடுமை செய்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி.**

எனக்கு பொதுச்சொத்து சம்பந்தமாக எனக்கு பிரச்சினை ஏதும் தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 211/2021**
**Prosecution Witnesses: 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : கோடிஸ்வரி | Caste | : |
| Father Name/ Husband Name | : ராமர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(15.10.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் சிவரக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கார்த்திஸ்வரி எனது உடன்பிறந்த தங்கை ஆவார். ஆஜர் எதிரி தர்மசுந்தரம், அழகுலட்சுமி, பாக்கியலட்சுமி, நாகமுத்துராஜா ஆகியோர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். மற்றொரு செண்பகவள்ளியும் எனது உறவினர் தான் ஆவார். அவர் இறந்துவிட்டார். சிவரக்கோட்டையில் உள்ள பூர்வீக வீட்டில் 20 வருடங்களாக இறந்துபோன எதிரி செண்பகவள்ளி குடியிருந்து வந்தார். கடந்த 13.03.2021 அன்று 3.30 மணியளவில் எனது அண்ணன் மணிகண்டன் என்ற சந்தனகுமார் வந்து எதிரி தர்மசுந்தரத்திடம் எதற்காக பூர்வீக வீட்டை இடித்திர்கள் என கேட்டார். அதற்கு எதிரி அழகுலட்சுமி நீ எதற்காக கேட்டு வருகிறாய் என சொல்லி மணிகண்டனை அழகுலட்சுமி விலக்குமாற்றால் அடித்துவிட்டார். அடிக்க வந்த போது அப்பா குறுக்கே சென்று தடுத்த போது எனது அப்பாவையும் தங்கராஜையும் அடித்துவிட்டார்கள். அ.சா.1 கார்த்திஸ்வரியை எதிரி தர்மசுந்தரம் வலது கையில் கடித்துவிட்டு வயிற்றில் எத்தி வலது

காதில்அடித்து காயம் ஏற்படுத்தினார். 108 ஆம்புலன்சு மூலம் அ.சா.1 ஐ திருமங்கலம் அரசு மருததுவமனைக்கு நான் அழைத்து சென்றேன். அங்கு முதல் உதவி சிகிச்சை செய்து மேல் சிகிச்சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு 3 நாட்கள் அ.சா.1 சிகிச்சையில் இருந்தார். அ.சா.1 எனது மூலமாக சம்பவம் பற்றி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டார். அதை நான் கள்ளிக்குடி காவல் நிலையம் சென்று கொடுத்தேன். போலிசார் வழக்கு பதிவு செய்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1,2,3,5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் சம்பவத்தின்போது தேனி மாவட்டம் கலெக்டர் ஆபிஸ் அருகில் உள்ள கருவேலம்பட்டியில் குடியிருந்து வந்தேன் என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு கடந்த 5 வருடங்களாக சிவரக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் 1 வது எதிரி தர்மசுந்தரம் மதுரையில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். சம்பவத்தன்று ஒரு விஷேச சம்பந்தமாக சிவரக்கோட்டைக்கு வந்தார். 5வது எதிரி பாக்கியலட்சுமி தேனூரில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நாங்களும் எதிரிகளும் அந்த விஷேசத்தில் தான் சம்பவத்தன்று வந்திருந்தோமா என்றால் நாங்கள் கோவிலுக்கு வந்திருந்தோம். அவர்கள் விஷேசத்திற்கு வந்திருந்தார்கள். அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கு இணங்க வீடு இடித்ததற்கு மறுநாள் நானும் மற்றவர்களும் அங்கு வந்திருந்தோம் என்றால் சரிதான். அந்த பழைய வீட்டில் இறந்துபோன 4வது எதிரிதான் கடந்த 20 வருடமாக குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அந்த வீட்டிற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த பட்டா எதிரிகள் பெயரில் இருந்ததால் தான் வீடு பழைய வீடு என்பதால் அதை இடிப்பதற்காக 4வது எதிரி சொன்னதின் பேரில் மற்ற எதிரிகள் சம்பவத்திற்கு முதல் நாள் இடித்தார்கள் என்று சொன்னால் சரிதான். எனது தங்கை சொல்லி தான் நாங்கள் எல்லாரும் செண்பகவள்ளி வீட்டிற்கு சென்றோமா என்றால் செல்லவில்லை. அவர்கள் தான் வந்தார்கள். செண்பகவள்ளி என்பவர் எங்கள் மீது பிரச்சினை சம்பந்தமாக புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்கள் தான் முதலில் புகார்

கொடுத்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் பாகம் சம்பந்தமாக சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தோமா என்றால் இல்லை. நான் தான் புகாரை காவல் நிலையம் சென்று கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ1 புகாரில் என் கையெழுத்து எங்கு உள்ளது என்றால் என்னிடம் போலிசார் முதல் தகவல் அறிக்கையில் தான் கையெழுத்து வாங்கினார்கள். அதை தான் சொன்னேன். எனக்கு எழுதப்படிக்க தெரியாது. ஆனால் கையெழுத்து வாங்கினார்கள். புகாரில் அடித்தும் திருத்தமும் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புகாரில் என்ன விபரம் எழுதியிருந்தது என்று தெரியாது. எனது தங்கை எழுதிக்கொடுத்ததை மறுநாள் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் புகார் கொடுத்த பிறகு ஊருக்கு சென்றுவிட்டேன். எதிரிகளுடைய அம்மா பேரில் உள்ள வீட்டை தான் இடித்தார்கள் என்றாலும் எனது தங்கை சொன்னதின் பேரில் தான் நான் புகார் கொடுத்தேன் என்றாலும் நான் சம்பவ சமயத்தில் ஊரில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் நடக்காத சம்பவத்திற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்களை தாக்கவும் இல்லை. 1ம் எதிரி வேலை பார்ப்பதால் அவரிடம் இருந்து எப்படியாவது சொத்தை வாங்கவேண்டும் என்ற நோக்கில் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. தற்போது நான் பாகம் வாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் சிவரக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை